சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 186/2024

06.11.2025.

PW- 1

வா.சா.1. தமிழரசி, த/பெ. வெற்றிச்செல்வம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-

எத்தனை அயிட்ட சொதது்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - 2 அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 அயிட்ட சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் - 5.5 ஏர்ஸ் ஆகும்.அது காலி மனையாகும். இன்றைய தேதியில் தாவா சொத்துக்கள் யார் அ.னுபவத்தில் உள்ளது என்றால் - எல்லார் அனுபவத்திலும் உள்ளது. தாவா சொத்துக்களுக்கு யார் பெயரில்பட்டா உள்ளது என்றால் - 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் சயெ்துள்ளேன் என்றால் - 2 ம் பிரதிவாதி அவரது மகள் 5 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த பத்திரம் செல்லாது என்றும் எனக்குரிய 1/6 பங்கை கேட்டும் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் மன்னார்குடியில் வசிக்கிறேன். பிரதிவாதிகள் சாந்தி மற்றும் தனபாக்கியம் உள்ளிக்கோட்டையில் குடியிருக்கிறார்கள். மேற்சொன்ன பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் - தவறாகும். நான் மேற்படி சாந்தி மற்றும் தனபாக்கியம் பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. எனது தந்தையார் பெயர் மகாலிங்கம். அவர் எப்போது இறந்தார் என்றால் - 1982 ம் வருடம் இறந்துபோனார். என் தந்தைக்கு 2 தாரங்கள். மூத்த தாரத்தின் பெயர் மருதவள்ளி. அவர் 1964 ம் வருடம் இறந்துவிட்டார். மகாலிங்கம் - மருதவள்ளிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் - நான் மட்டும்தான். என் அம்மா இறந்தபிறகு என் அப்பா 2 ம் திருமணம் செய்துக்கொண்டார். 2 ம் மனைவியின் பெயர் தனபாக்கியம் அவர்தான் 2 ம் பிரதிவாதி என்றால் - சரிதான். மகாலிங்க தேவர் - தனபாக்கியம் தம்பதியருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் - 4 பிள்ளைகள். 1) மேனகாக, (2) மலர்கொடி (3) சாந்தி (4) அமிர்தவள்ளிஆகும். அமிர்தவள்ளி திருமணமாகி இறந்துவிட்டார். அவரது கணவர் பெயர் இளங்கோ. அமிர்தவள்ளி - இளங்கோவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் - 1 மகன சிவசுப்ரமணியன் ஆவார். 1 ம் பிரதிவாதி யார் என்றால் - என் அப்பாவின் அண்ணன் மகன். என் அப்பாவின் அண்ணன் பெயர் என்னவென்றால் - சபாபதி ஆகும். சபாபதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் - 1 மகன் கலியபெருமாள். எனது கட்சிப்படி தாவா சொத்துக்கள் யாருக்கு சொந்தம் என்றால் - எனது அப்பாவிற்கு சொந்தமானது. அவர் பெயரில் பத்திரங்கள் உள்ளதா என்றால் - உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1945 ம் வருடம் கலியபெருமாளிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கினார். விற்றவருக்கு அன்றைய

தேதியிலேயே உரிமை போய்விட்டது என்றால் - சரிதான். 1ம் பிரதிவாதியை ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் - எங்களை பராமரிப்பது தொடர்பாக என் அப்பா உயில் எழுதி வைத்துள்ளார். அதன் காரணமாக 1ம் பிரதிவாதியை கட்சி சேர்த்துள்ளேன். என் அப்பாவை உயிலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தாக்கல் செய்துள்ளேன்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.